Washington-இன் ஆரம்பகால இடையீட்டு சேவைகள், Department of Children, Youth & Families (குழந்தைகள், இளைஞர்கள் & குடும்பங்கள் துறை), Office of Superintendent of Public Instruction (பொதுக்கல்வி கண்காணிப்பாளர் அலுவலகம்), Department of Social and Health Services (சமூக மற்றும் சுகாதார சேவைகள் துறை), Department of Health (சுகாதாரத் துறை) மற்றும் Department of Services for the Blind (பார்வையற்றோருக்கான சேவைத் துறை) ஆகிய துறைகளின் ஒருங்கிணைந்த முயற்சியாகும்.

## தொடர்புக்கு:

**Washington மாநில Department of Children, Youth & Families Early Support for Infants and Toddlers (குழந்தைகள், இளைஞர்கள் & குடும்பங்கள் துறை-இன் குழந்தைகள் மற்றும் மழலையர்களுக்கான ஆரம்பகால ஆதரவுத்) திட்டம்**

PO Box 40970
Olympia, Washington
98504-0970

**esit@dcyf.wa.gov**

**www.dcyf.wa.gov/services/child-development-supports/esit**

**ஹெல்ப் மி குரோ Washington**
**தொலைபேசி**: 1-800-322-2588
**www.parenthelp123.org**

*DCYF இனம், நிறம், பாலினம், மதம், நெறி, திருமண நிலை, தேசியம், பாலியல் நோக்குநிலை, வயது, அனுபவமுள்ள நபர் என்ற நிலை அல்லது உடல், உணர்ச்சிகள் அல்லது மனநல குறைபாடு போன்றவற்றைப் பொருட்படுத்தாமல் அனைத்து நபர்களுக்கும் அதன் திட்டங்களுக்கும் சேவைகளுக்கும் பாகுபாடு காட்டாது, அதோடு சமமான அணுகலை வழங்குகிறது.*

*மாற்று வடிவம் அல்லது மாற்று மொழியில் இந்த வெளியீட்டின் இலவச நகல்களை நீங்கள் விரும்பினால், DCYF Constituent Relations (DCYF அமைவுறு வாடிக்கையாளர் உறவு)-களை 1-800-723-4831 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும் அல்லது* **communications@dcyf.wa.gov** *மின்னஞ்சல் செய்யவும்.*

DCYF PUBLICATION FS_0032 | DEL 11-003 TM (07-2023) Tamil

# தயவுசெய்து கேளுங்கள். குழந்தைகள் காத்திருக்க முடியாது.

*பிறந்தது முதல் மூன்று வயது வரை உள்ள குழந்தைகள் எப்படி வளர்ந்து மேம்படுகின்றன என்பது பற்றியும் அதில் உங்களுக்கு ஏதேனும் கவலை இருந்தால் அப்போது என்ன செய்யவேண்டும் என்பது பற்றிய தகவல்களும் கிடைக்கின்றன.*



Washington State Department of
CHILDREN, YOUTH & FAMILIES

## உங்கள் குழந்தையின் வாழ்க்கையில் ஒரு பெற்றோராக நீங்கள் தான் மிக முக்கியமான நபர்.

குழந்தைகள் முதல் மூன்று வருடங்களில் வேகமாக வளர்ந்து மாறுகிறார்கள். உங்கள் குழந்தை மற்றும் அவர்கள் எப்படி வளர்கிறார்கள் என்பதைப் பற்றி சிந்தியுங்கள். உங்கள் குழந்தையைப் பற்றி நீங்கள் நன்றாக அறிவீர்கள். உங்கள் குழந்தை எப்படி, எப்போது சிரிக்கிறது, உட்காருகிறது, நடக்கிறது, பேசுகிறது அல்லது கப்பை வைத்திருக்கும் போன்ற விஷயங்களை நீங்கள் கவனிக்கிறீர்கள். உங்கள் குழந்தை பல்வேறு வளர்ச்சி நிலைகளில் எப்படி வளர்கிறது என்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். குழந்தை வளர்ச்சியில் தாமதம் ஏதும் ஏற்பட்டால், அதற்கான சேவைகள் மாநிலம் முழுவதும் கிடைக்கின்றன. **Washington மாநில Early Support for Infants and Toddlers (குழந்தை மற்றும் மழலையர்களுக்கான ஆரம்பகால ஆதரவு) திட்டம்** குடும்பங்களுக்குத் தேவையான சேவைகளைப் பெறுவதற்கு மாநிலம் தழுவிய முயற்சியை ஒருங்கிணைக்கிறது.

## என் குழந்தையின் வளர்ச்சி பற்றி எனக்கு கேள்விகள் இருந்தால் என்ன செய்வது?

உங்கள் பகுதியில் உள்ள Family Resources Coordinator (குடும்ப வள ஒருங்கிணைப்பாளர், FRC)-இன் பெயருக்கு **1-800-322-2588 என்ற எண்ணில் ஹெல்ப் மி குரோ Washington-ஐஅழையுங்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் அல்லது பிரதேசத்திலும் FRC-கள் உள்ளன.** உங்கள் குழந்தைக்குத் தேவையான ஆரம்பகால இடையீட்டுச் சேவைகளைப் பெற அவர்கள்உங்களுக்கு உதவுவார்கள். உங்கள் உள்ளூர் சுகாதாரத் துறை அல்லது பள்ளி மாவட்டத்தையும் நீங்கள் அழைக்கலாம்.

உங்கள் கவலைகளைப் பற்றி உங்கள் சுகாதார வழங்குநரிடம் பேசுங்கள். அவர்கள் ஒரு முதற்கட்ட பரிசோதனையை வழங்கலாம் அல்லது பிற உதவிவளகளைப் பரிந்துரைக்கலாம். உங்களிடம் உடல்நலக் காப்பீடு இல்லையெனில் கூடுதல் தகவல் அல்லது உதவி தேவைப்பட்டால், மேலே பட்டியலிடப்பட்டுள்ள எண்ணில் **ஹெல்ப் மி குரோ Washington**-ஐ அழைக்கவும். Early Support for Infants and Toddlers (குழந்தைகள் மற்றும் மழலையர்களுக்கான ஆரம்பகால ஆதரவு) இணையதளத்திலிருந்தும் நீங்கள் கூடுதல் தகவல்களைப் பெறலாம்: **www.dcyf.wa.gov/services/child-development-supports/esit**.



உங்கள் குழந்தையின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை உள்ளே சரிபார்க்கவும்.

